நாங்கள் கடினமுள்ளவர்களாக மற்றவர்களை மன்னிக்கமுடியாதவர்களாவும் ஆனால் வெளியிலே தூய்மையாளர்களாகக் காட்டிக் கொள்ள முற்படுகின்றோம். கீழ்ப்படிவு இல்லாதவர்களாக அடுத்தவர் பிழைகளைச் சுட்டிக்காட்டி நீதிமான்களாக நடிக்கின்றோம். காலத்தைப் பகைத்துக் கொண்டு காற்றில் பறக்க விளைகின்றோம்.

நீதிக்குத் தலைவணங்காது அநீதிகளுக்கு ஆமாப் போடுகின்றோம். எம்மை நாமே ஏமாற்றி எம்க்குள் போலிச் சமாதானத்தை வளர்த்துக் கொள்ளுகின்றோம். அதனாலே எமது உள்ளம் நிறைவு காண்பதில்லை.

இழந்து போனதைத் தேடி மீட்கவே மீட்பராக இயேசு வந்தார். அவ்வாறு நாமும் மீட்படையும் போது வானகத்தில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சக்கேயு மீட்படைந்ததால் அவனது இல்லத்திலே மகிழ்ச்சி உண்டானது. எப்பொழுது எமது உள்ளங்களிலும் மகிழ்ச்சிக்கான வழிகள் பிறக்கின்றதோ நாம் மற்றவர்களை எம்மிலும் மேலானவர்களாக ஏற்றுக்கொள்வோம். பகிர்ந்து வாழ்வோம். இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைகள் எமக்கு மேல்வரிச் சட்டமாக உள்ளன. அவ்வார்த்தைகள் எம் பாதைக்'கு வெளிச்சமாகவும் எம்மைக் கரைசேர்க்கும் கலங்கரைத் தீபமாகவும் மீட்புக்கு வழியாகவும் உள்ளன. இறைவார்த்தையின் படி வாழ்ந்து மீட்பின் பாதையைத் கண்டடைவோம், வாழ்வடைவோம். □

---

# வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உடனடியாக நட்டஈடு வழங்கப்பட வேண்டும்!

## ம.ம.மு. சிரேஷ்ட உறுப்பினர் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

பிந்துநுவெவ தடுப்பு முகாமில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும், 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரம், வன் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நட்ட ஈடுவழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் பதுளை மாகாணசபை உறுப்பினருமான ஏ.அரவித்தகுமார் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட அப்பாவிக் கிராம வாசிகள் பிந்துநுவெவ தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்த முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 27 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதோடு இருவர் படுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

இச் சம்பவத்தின் பின்னரும் பதுளை, தலவாக்கொல்லை மற்றும் பிற மலைநாட்டுத் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாயினர்.

இது சம்பந்தமான வழக்கில் 2003 ஆம் ஆண்டு இரண்டு பொலிஸாருக்கும் ஒரு கிராமவாசிக்கும் உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் நடைமுறைச் சிக்கல் இருப்பதால், பாதிக்கப்பட்டவர்கள் வசமுள்ள ஆவணங்களைக் கொண்டே அவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கையெடுக்கவேண்டும் என அரவிந்தகுமார் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படி அந்த முகாமிலிருந்த 17 வயதுக்குட்பட்ட 4 சிறுவர்கள் எரிக்கப்பட்டும், ஒருவரது கழுத்து மின்சார உலோகமறுக்கும் கம்பத்தால் சீவப்பட்டும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் கொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 18-25 வயதுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

---

# பழைய வாகனங்களுக்கு வரி அதிகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை!

(கொழும்பு)

பாவித்த மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும்போது புதிய வரி வீதத்தை அமுல் படுத்துமாறு நிதியமைச்சர் விடுத்த அறிவித்தலுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை நேற்று முன்தினம் விதித்துள்ளது.

இந்த இடைக்காலத் தடை உத்தரவு இம் மாதம் 19 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

'வாஸ்சனா ரேடிங் லங்கா பிறைவேற் கம்பனி' தாக்கல் செய்த இந்த மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

இந்த மனுவில் நிதியமைச்சர் சரத்அமுனுகம, திறைசேரி செயலாளர் பி.வி.ஜெயசுந்த ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அமைச்சரவையின் இணக்கத்துடன் கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி நிதியமைச்சினால் வெளியிட்ட அறிவித்தலில் இறக்குமதி செய்யப்பட்ட பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான வரியை அதிகரிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் வர்த்தகமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்படாத இந்த அறிவித்தலை அதிகாரமற்றதாக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனுவில் கோரப்பட்டிருந்தது.

பாவிக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்யும் போது முன்னர் விதிக்கப்பட்ட வரிவீதங்களுக்கு அமைய வரி அறவிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எஸ்.சிறிஸ்கந்தராசா உத்தரவிட்டிருந்தார். (க-8)

---

# சிறுவர்களைத் தின்னும் இராட்சத கழுகு பேருவளை கடற்பிரதேசத்தில் அட்டகாசம்!

(கொழும்பு)

பயாகலவிற்கும், பேருவளைக்குமிடையிலுள்ள கடற்கரைப் பிரதேச வான் பரப்பில் "இராட்சத கழுகு" ஒன்று வட்டமிடுவதனால் சிறுவர்களை மாலை வேளையில் கடற்கரைப் பக்கத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று பேருவளைப் பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுள்ளனர்.

இந்த இராட்சதக் கழுகு கடற்கரையோரங்களில் விளையாடும் சிறுவர்களை கொத்தியும் நகங்களினால் கீறியும் காயப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இராட்சதக் கழுகு கடந்த வாரம் ஐந்தரை வயதான திமுது மதுசங்க என்ற சிறுவனை சுமார் ஆறு அடி உயரத்திற்கு தூக்கிச் சென்றுள்ளது.

இதனை அவதானித்த சிறுவனின் தாய் குறித்த கழுகை கம்புகளினால் தாக்கி தனது குழந்தையை மீட்டுள்ளார்.

இராட்சதக் கழுகின் நகக் கீறலுக்குள்ளான இந்தச் சிறுவன் சிகிச்சைக்காக நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அம்பலபொலச் சந்தியில் வசித்து வருகின்ற நம்பிக்க தசில்வா, நாமலி ஆகியோரின் ஒரேயொரு குழந்தையான திமுது மதுசங்க கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோதே இராட்சதக் கழுகு சிறுவனைத் தூக்கிச் செல்வதற்கு முற்பட்டுள்ளது.

சுமார் 8 அடி விசாலமான இறக்கைகளைக் கொண்ட இந்த இராட்சதக் கழுகு கடற்கரையோரப் பிரதேசத்திலுள்ள வான் பரப்பில் வட்டமிட்டு வருவதாக பேருவளைப் பொலிஸார் தெரிவித்தனர். (க-10)

---

## 'துயர் வெல்லும் துணை' இசைத் தட்டு வெளியீடு

ஸ்ரீ பத்திரகாளி அம்மனின் 'துயர் வெல்லும் துணை' என்னும் பாடல் இசைத் தட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப3.00 மணிகக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை சி. மதியாபரணமும், வாழ்த்துரையை தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி ஆகியோரும் சிறப்புரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ்"ம் வெயீட்டுரையை பொ.ஐங்கரநேசனும் மதிப்பீட்டுரையை பேராசிரியர் என். சண்முகலிங்கன் மற்றும் சி.சிவலிங்கராஜா ஆகியோரும் நிகழ்த்தவுள்ளார்கள். (க-10)

## கட்டணம் அதிகரிப்பு

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்துக் கட்டணம் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இதுவரை காலமும் 10 ரூபாவாக இருந்து வந்த சேவைக் கட்டணம் தற்போது 15 ரூபாவாக அதிகரிகப்பட்டுள்ளது. (ப-126)

## சைவ சித்தாந்தப் பெருவிழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம், நீர்வேலி கணேசா அறநெறிப் பாடசாலையின் அனுசரணையுடன் நடாத்தும் சைவ சித்தாந்தப் பெருவிழா, நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்களும் சிவஸ்ரீ இ.சுவாமிநாதக் குருக்களும் வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையை ஸ்ரீ சோமஸ்கந்தாக்கல்லூரி ஆசிரியர் ச.லலீசனும், தொடக்கவுரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவதமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கமும், சிறப்புச் சொற்பொழிவுகளை இளைப்பாறிய அதிபர் சு.செல்லத்துரையும் மற்றும் யாழ்.பல்கலைக்கழக இளைப்பாறிய போதனாசிரியர் ச.விநாயகமூர்த்தியும் நிகழ்த்தவுள்ளனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் பேச்சு, கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (க-10)


## சைவப் பெரு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் வருடந்தோறும் நடாத்தும் சைவப் பெரு விழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று காலை 8.30ற்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு ஆனைக்கோட்டை முத்த நயினார் ஆலய மண்டபத்தில் இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-10)

சினிமாச் சிதறல்



மணிவண்ணனின் மகன் ரகுவண்ணன் ஏற்கனவே 'மாறன்' பட்டத்தின் மூலம் நடிகராகி இருக கிறாா. தொடர் நது படம் இய க்குவதிலும் ஆர் வத்தோடு இருக் கிறார். இப்போது 'அது ஒரு கனாக் காலம்' படத் தில் 'கிளித் தட்டு கிளித் தட்டு...' என்ற பாட்டை இளையராஜா இசையில் பாடியிருக்கிறார் மணிவண்ணனின் மகள் ஜோதி.

# புதுமுகங்க

சமுதாயம் நினைத்தால் ஒருவனை நல் மையமாக வைத்து உருவாகி வரும் புதுப்படம் '

இதை ஜெயம் கலை சங்கமம் நிறுவனம் கொடிய நோயால் பாதிக்கப்படுகிறான். அதனால் அ ஒதுக்கி அவனது வாழ்க்கையை எப்புகு தீர்மிக்கி நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம், பாடல்க யன மற்றும முன்னணி இயக்குனர்கள் பலரிடம உதவி பெரியார் விருது பெற்றார். மேலும் 'பொன்மகள் வ பதிவு செய்ய, கே.பதி அரங்கம் அமைக்கிறார். மி முருகன் நடனப் பயிற்சி அளிக்க மணிமாறன் எடி தயாரிக்கிறார்.



# ரோஜா நடிக்கும் 'கரகாட்டக்காரி'

எம்.ஜெயலட்சுமி மணிசாமி பிரமாண்டமாகத் தயாரிக்கும் படம் 'கரகாட்டக்காரி'.

இந்தப் படத்துக்காக இளையராஜா இசை அமைப்பில் ஏழு பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

சங்கரன்கோவில் அருகே மேலநீலிதநல்லூர் வெளியப்பம்சாமி கோவிலில் 'காட்டுக்கிளி காட்டுக்கிளி... எங்க கூட்டுக்கொரு பாட்டு....' என்று வாலி எழுதி கார்த்திக், பவதாரணி பாடிய பாடலுக்கு ஐம்பத்துக கும மேற்பட்ட நடனக் கலைஞர்கள் மத்தியில் விலாசினியும், எஸ்.எஸ். ஆர்.மகன் கண்ணனும் தலையில் கரகம் சுமந்து நடனமாடிய காட்சி படமாக்கப்பட்டது.

படத்தில் கரகாட்டக்காரியாக ரோஜா நடிக்க, அவரது ஜோடியாக டான்ஸ் மாஸ்டர் சுதாகர் வசந்த் நடிக்கிறார். மற்றும் விஜுச்சக்கரவர்த்தி, தயாகு, செநதில், வடிவுக்கரசி, நளினி, ஜுனியர் சில்க், மிகா, விநாயக ராஜ், எம்.எஸ்.பாஸ்கர், நெல்லை சிவா, பாரதிகண்ணன், ஆட்டோகிராப் வேல்முருகன், பெங்சமின், போண்டாமணி, நவாப்கான், விஷால், சிவ காசி பயில்வான் உட்பட. பலர் நடிக்கின்றனர்.

மேத்ய, ராஜன் ஒளிப்பதிவு செய்கிறார். லட்சுமணன் எடிட்டிங் கவனிக்கிறார். இளையராஜா, வாலி, முத்துலிங்கன், மு.மேத்தா காம கோடியன், டாக்டர் கிருதியா புண்ணியா, டாக்டர் முத்து செல்வுக்குமார் ஆகியோர் பாடல்கள் எழுதுகின்றனர்.

லலிதா - மணி நடனப் பயிற்சி அளிக்கிறார். அன்டனி பீட்டர் கதை எழுதுகிறார். முனிரத்தனம், ஆர்.ஜி மாரியப்பன் ராஜா தயாரிப்பு நிர்வாகம் கவனிக்கின்றனர்.

இந்தப் படத்துக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி பாரதி கண்ணன் இயக்குகிறார். டிசெம்பர் மாத இறுதியில் படம் வெளியாகிறது.



'ட்ரீம்ஸ்' தனுஷ், பாருல்

# சினேகாவைப் பார்த்து பரிதாபப்பட்டார் பிரசாந்த்



சிவா. மருத்துவக் கல்லூரியில படிக்கும் மாணவன். தினந்தோறும் எழும் பூரில் இருந்து தாம்பரத்தில் உள்ள கல்லூரிக்கு மின்சார ரயிலில் போய வருபவன். அதே ரயிலில் தினந்தோறும் வருபவள் மகா.

சிவாவின் அழகைப் பார்த்து மகா ரசிப்பதும் மகாவின் அழகைப் பார்த்து சிவா ரசிப்பதும் வாடிக்கை. இருவரும் தங்களது காதலைப் பரிமாறிக் கொள்ளாமல் மௌனம் காத்தனர்.

ஒருநாள் இருவரும் ஒருவரையொருவர் ரசித்துக்கொண்டிருந்த நேரத்தில் பிறபொக்கெட் திருடன் வேலு, சிவா பொக்கெட்டிலிருந்த பணத்தைத் திருடிவிட திட்டம் போட்டான். அதன்படியோ போஸைத திருடினான்.

அவன் பிற்பொக்கெட் அடிப்பதைப் பார்த்துவிட்ட மகா அதைச் சைகை முறையில் சிவாவிடம் சொன்னாள். மகா சைகை முறையில் சொன்னதால் இவவளவு அழகான பெண்ணைப் படைத்த ஆண்டவன் அவளுக்குப் பேசும் சக்தியைக் கொடுக்கவில்லையே என்று வருத்தப்பட்டான். அத்துடன் அவள் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட சிவா அவன் பிற்பொக்கெட அடித்தது தெரியும். ஆனால் பேர்ஸில் பணம் எதுவும் இல்லை என்று சைகையால் தெரிவித்தான்.

மறுநாளும் திருடன் எப்படியும் பிற்பெர்க்கெட் அடிப்பான் என்று நினைத்த சிவா பேர்சுக்குள் தேள். ஒன்றைப் பிடித்துப் போட்டிருந்தான்.

வழக்கம் போல பிற்பொக்கெட அடித்த வேலு, போசுக்குள் கையைவிட தேள் கொட்டி துடிதுடித்தான்.

இப்படியொரு காட்சி மர்ஸ் எண்டர்டெயின் மெண்ட் குருப வழங்கும் சிடிவி எணடர் டெயின் மென்ட் லிமிடெட் பட நிறுவனத்தின 'ஆயுதம்' படத்துக்காகப் படமானது.

சிவாவாக பிரஷாந்த், மகாவாக சினேகா, வேலுவாக வடிவேலு நடித்தனர். மற்றும் வில்லனாக சுப்புராஜ் என்பவர் அறிமுகமாகிறார்.

மன்சூரலிகான், ஜனகராஜ் ராஜேஷ் அஜெய்ரத்தினம், ராமன ஐயர், கலைராணி இவர்களுடன் மீனல், ரஸ்னா என்ற மும்பை புதுமுகங்களும் அறிமுகமாகிறார்கள்.

# 'ஜனனம்'

படித்துமுடித்த இளைய சமுதாயதின் வாழ்க்கைகளில் உருவாகும் இன்னல்களுககும், அதனால ஏற்படும் பினவிளைவுகளுக்கும் அரசாங்கமும் அ... சா... அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளே காரணம் என்பதைத் துணிச்சலோடு எதிர்த்துப் போராடும் போராளியாகவும் எம்.பி.ஏ.பட்டதாரியாகவும் சூர்யா (அருண்).

படித்தவனுக்கும், உழைத்தவனுக்கும் சரியான அங்கீகாரம் கொடுக்காத அதிகார வர்க்கத்தின் ஏமாற்று வேலைகளை பத்திரிகைகளின் பக்கங்களில் நிரப்பி, அரசாங்கத்திற்கே அச்சறுததலை ஏற்படுததும் பததிரிகையாளராக உதயமூர்த்தி (ரகுவரன்) விளங்குகிறார்.

எவரும் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுவது தவறு என்றும் சட்டத்தைக்கொண்டு எதையும் சரி செய்யமுடியுமென்றும், இந்த தேசத்தின் கண்ணியம் எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது என்பதைக் கொள்கையாகக் கொண்டு விளங்கும் இராணுவ அதிகாரி ராஜசேகர் சூர்யாவின் தந்தை ஆவார். மகனின் போராட்டத்திற்கு ஒ... தடுப்பு...ராக நிற்கிறார்.

ஜாதி வெறியைக் கருவியாகக் கொண்டு அரசியலில் நுழைந்த முத்துக்கருப்பன் (ஆஷிஷ்) ஒரு கல்வி அமைச்சர். தன் இன மக்களுக்காகவும், தன்கடசிக்காரர்களுக்கும் மட்டும் தான் தன்னுடைய அமைச்சர் பதவி என்ற எண்ணம் கொண்ட முத்துக்கருப்பன் தன் பதவிக்கும் தன் அரசியல் வாழ்க்கைக்கும் எதிராக நிற்கும் எவரையும் விட்டு வைப்பதில்லை.

அமைச்சரின் பகையால் தன் மகனை இழந்து விடுவோமெனப் பயந்த ராஜசேகர் சூர்யாவை அறிவுறுத்துகிறார். தந்தையின் அறிவுரையை ஏற்க அவன் மறுக்கிறான்.

இந்தச் சூழ்நிலையில் ஏற்படும் மும்முனைப் போராட்டத்திற்குப் பின் யார் பக்கம வெற்றியிருந்தது என்பதைச் சொல்லும் படம் ஜனனம். இந்தப் படத்தில் அருண், பிரியங்கா திரிவேரி, நந்திதா, ரகுவரன், நாசர் மற்றும் பலர் நடிக்கின்றனர்.


# …கங்கள் நடிக்கும் 'அகதி'

…ல் ஒருவனை நல்லவனாகவும் உருவாக்க முடியும். தீயவனாகவும் உருவாக்க முடியும் என்ற கருத்தை …வரும் புதுப்படம் 'அகதி'.

…ங்கமம் நிறுவனம் தயாரிக்கிறது. நல்ல கௌரவமான குடும்பத்தில் பிறந்த ஒருவன் சின்ன வயதிலேயே …றான். அதனால் அவனை அரவணைத்து ஆதரிக்க வேண்டிய குடும்பமும், இந்தச் சமுதாயமும் வெறுத்து … எப்படிச் சீரழிக்கிறது என்பதை மாறுபட்ட ஒரு கோணத்தில் சொல்லப்படுகிறது. இதில் புதுமுகங்கள் …

…வசனம், பாடல்கள் எழுதி ஜெயம் பெருமாள் இயக்குகிறார். ஜனாதிபதி விருதுபெற்ற கே.ஜோதி பாணடி …கள் பலரிடம உதவி இயக்குனராகப் பணியாற்றிய இவர், நாடகத்துறையில் பல சாதனைகள் புரிந்து தந்தை …ம் 'பொன்மகள் வந்தாச்சு' என்ற ரீ.வி தொடரை வெற்றிகரமாக இயக்கி இருக்கிறார். சூரியன் ஒளிப் … அமைக்கிறார். மின்னல் முருகன் சண்டைப் பயிற்சி அளிக்க, மனீஷ் இசை அமைக்கிறார். கொம்பு …் மணிமாறன் எடிட்டிங் செய்கிறார். டி.ஜோதி தயாரிப்பு நிர்வாகம் கவனிக்க, சேர்மன் கே.கே.ஸ்ரீனிவாசன் …



'நெறஞ்ச மனசு'
விஜயகாந்த், சூசன்

## …னம்'

…இளைய சமுதா …ருவாகும் இன் …டும் பனவளைவு …அ பிரச் சாங்வ …யல் வாதிகளை …சலோடு எதிர்த் …வும் எம்.பி.ஏ.பட்ட …ண்).

…ழைத்தவனுக்கும் …க்காத அதிகார …லகளை பத்திரி …ப்பி, அரசாங்கத் …த்தும் பத்திரிகை …வரன்) விளங்கு

… எதிராகப் போரா …த்தைக்கொண்டு …மென்றும், இந்த …ந்தவிதத்திலும் …் கொள்கையா …ராணுவ அதிகாரி …ந்தை ஆவார். … தடுப்…

…் கருவியாகக் …ழைந்த முத்துக் …ல்வி அமைச்சர். …ும், தன்கடசிக் …ன் தன்னுடைய …ண்ணம் கொண்ட …க்கும் தன் அர …ாக நிற்கும் எவ …்லை.

…ால் தன் மகனை …யந்த ராஜசேகர் …ார். தந்தையின் …ன் மறுக்கிறான். …ல் ஏற்படும் மும் … பின் யார் பக் …தைச் சொல்லும் …டத்தில் அருண், …திதா, ரகுவரன், …க்கின்றனர்.

எல்லோரையும் போல்தான் காவேரியும் தன் காதலை மூடி மறைக்க முடிந்தளவு முயற்சித்தார். ஆனால், கர்ப்பததையும் காதலையும் எத்தனை நாளைக்குத்தான் மூடி மறைக்க முடியும்.

காவேரியின் காதல் முத்தி கடைவீதிக்கு வந்துவிட்டது. நடிகரும் இயக்குநருமான சூர்யகிரண், அதாவது மௌன கீதங்கள் படத்தில் சிறுவனாக நடித்த மாஸ்டர் சுரேஷ். இந்த சூர்யாகிரண் காதல் விவகாரம் இப்போது கல்யாணத்தில் முடிந்திருக்கிறது.

- - - - - - - - - - - - - - - -

**சினேகா ஹொலிவுட் படம் ஒன்றில் நடிக்கிறார். லொஸ் ஏஞ்சல்சைச் சேர்ந்த ராம் என்கிற இயக்குநரின் படத்தில் நடிக்கிறார். இதற்காக முழுத் தகவலையும் சினேகாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.**

**வெகுவிரைவில் சினேகாவின் புன்னகை ஹொலிவுட்டில் மலரக்கூடும்.**

ரஜினிகாந் தனது திருமண அறிவிப்பை வெளியிட்ட நேரம் பகல் 1.50மணி. அதே சென்டிமெண்டில்தான் ரஜினியின் மகளைக் கைப்பிடிக்கும் தனுஷ் தனது திருமண அறிவிப்பையும் அதே பகல் 1.50 மணிக்கு வெளியிட்டிருக்கிறார். சூப்பர் சென்டிமெண்ட்டப்பா!

'ஐயா'
சரத், லட்சுமி



# கவர்ச்சிக்கு நான் எதிரி – சினேகா

**தீபாவளி ஷொப்பிங் எல்லாம் முடிந்துவிட்டதா சினேகா?**

முடிந்தது. பதினைந்தாயிரம் ரூபாயில் ஒரு பட்டுப் புடவையும், ஒரு மாடர்ன் டிரெஸ்சும் எடுத்தேன. தீபாவளியன்று பட்டுப் புடவை சரசரக்க, பட்டாசு வெடித்துக் கொண்டாடும் சுகமே தனி. இநத வருடம் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு பட்டாசு வாங்கத் திட்டமிட்டு இருக்கிறேன்.

**எந்த நிலைமையிலும் கவர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன் என்று உறுதியாக இருக்கும் காரணத்தால் உங்களைத் தேடி நிறையப் பட வாய்ப்புக்கள் வராது அல்லவா?**

கவர்ச்சி காட்டி நடிக்கமாட்டேன் என்று சொல்லும் காரணத்தால், என்னைத் தேடி குறிப்பிட்ட பட வாய்ப்புகள் மட்டுமே கிடைக்கிறது. நிறையப் படங்களில் நடிக்கவேண்டுமென்பதற்காக கவர்ச்சி காட்டி நடிக்க முடியுமா என்னநான் சினிமாத் துறைக்கு வந்தபோது எடுத்த ஒரு உறுதிமொழி என்ன தெரியுமா? எந்தச் சூழ்நிலையிலும், அது யார் வற்புறுத்தினாலும் சரி துளியளவுகூட கவர்ச்சி காட்டி நடிக்க மாட்டேன் என்பதுதான். வலுககட்டாயமாக நான் கவர்ச்சி காட்டியாக வேண்டும் என்று யாரும் என்னை வற்புறுத்தியது இல்லை.



எனது கொள்கையில் கண்டிப்பாக இருப்பதால், என்னைத் தேடிவரும் படவாய்ப்புகள் எல்லாமே கண்ணியமான கரக்டர்கள் கெண்டதாகவே இருக்கிறது இதைவிட ஒரு நடிக்கைக்கு வேறென்ன பெருமை வேண்டும்?

புடவையில் கூட கவர்ச்சி காட்டி நடிக்க முடியும் என்பதைப் பல படங்களில் நிரூபித்து இருக்கிறேன். கவர்ச்சி என்பது என்ன? ஒரு முறை பார்த்தால் மீண்டும் ஒருமுறை பார்க்கத தூண்டும் அந்த ஈர்ப்புத்தானே!

இப்போது 'ஆயுதம்' படத்தில் முதன் முறையாக மடிசார் புடவை கட்டிக்கொண்டு நடித்து இருக்கிறேன். அந்தப் படத்தைப் பாருங்கள், நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் என்று.

**'போஸ்', 'அது'.... ஆகிய இரு படஙகள் வெற்றிகரமாக ஓடுகின்றன. பேய் படத்தில் நடித்த அனுபவம் எப்படி?**

அது ஒரு வித்தியாசமான அனுபவமாகத்தான் இருந்தது. நிஜமாகவே 'அது' படத்தில் நடித்து முடித்து வீட்டுக்குச் செல்லும்போது, யாரோ என்னைப் பின்தொடர்ந்து வருவது போலத் தோன்றும். உடனே நடுங்குவேன். பிறகு என்னை நானே தேற்றியபடி, இது வெறும் பிரமை என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவேன். இந்தப் படத்தில் முதன்முறையாக மேக்கப் போடாமல் நடித்து இருக்கிறேன். பார்வையில் வித்தியாசம் தெரியவேண்டும் என்பதற்காக, கண்களில் கான்டாக்ட் லென்ஸ் அணிந்து நடித்தேன். ஒரே சமயத்தில் 'போஸ்', 'அது' ஆகிய படங்கள் வெற்றிகரமாக ஓடுவதை நினைத்து மகிழ்ச்சியாக இருக்கிறது.

**தற்போது நீங்கள் நடிக்கும் படஙகள்....?**

பிரஷாந் ஜேடியாக 'ஆயுதம்' படத்தில் நடிக்கும் நான் இரண்டு புதுப படங்களில் நடிக்க பேசிக்கொண்டு இருக்கிறேன். தெலுங்கில் ஆனந்தம் படத்தின் ரீமேக்காக சிவா இயக்கத்தில் உருவாகும் 'சக்கராந்தி' படத்தில் நடிககிறேன். இதில் தேவயானி நடித்திருந்த கதாபாத்திரத்தில் நடிக்கும் எனக்கு வெங்கடேஷ் ஜோடியாக நடிக்கிறார்.

**ஆங்கிலப் படத்தில் நடிக்கப்போவதாக ஒரு செய்தி கேள்விப்பட்டோமே நிஜமா?**

அந்த ரகசியம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? ஆங்கிலப் பட வாய்ப்பு என்னைத் தேடி வந்துள்ளது நிஜம்தான். லொஸ்ஏஞ்சல்ஸ் ராம் என்பவர் இயக்குவதாகக் கதை அனுப்பி வைத்துள்ளார் . மிகவும் நல்ல கதை, அற்புதமான கரக்டர் . நானும் உங்களைப்போலவே அந்தப்படத்தில் நடிக்கப் போகும் நல்ல செய்தியை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

## நீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-3
தொடர் -V

மு. திருச்செல்வம்

தமிழ் ஈழத்தில் பல கற்கோவில்கள், சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் போன்ற பழைய ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. சோழரின் தலைநகரான பொலநறுவையில் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன.

கி.பி .1070 வரை சோழர் இலங்கைத் தீவு ழுமுவதையும் ஆண்டனர். தமிழர் ஆட்சி - தமிழரின் ஆட்சி நடைபெற்ற இன்நாட்களில் தமிழீழத்தின் வலிமை பெருகியது. வலிமையுடைய தொடர்ச்சியான தமிழீழ அரசு எழுவதற்குரிய கால்கோள் அமைக்கப்பட்டது.

முதலாம் விஜயபாகு கி.பி 1070ல் சோழரிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றினான். பொலறுவையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்தான். இவன் ஆட்சிக்காலத்தில் தலைநகர் ஏனைய நகரங்கள், ஊர்கள், சந்தைகள் என்பன தமிழரின் கைகளில் இருந்தன என நிக்காய சங்கிரகம் என்ற 14ஆம் நூற்றாண்டு சிங்கள நூல் கூறுகிறது.

## மாகனும் சந்திரபானுவும்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கலிங்க நாட்டவனான மாகன் என்பான் தமிழ் நாட்டுப்படை வீரர்களையும் மலையாளப் படைவீரர்களையும் கொண்டு இலங்கைக்கு வந்தான். படையெடுத்து பொலநறுவை அரசை வீழ்த்தினான். பொலநறுவையைத் தலைநகராக்கினான். மாகனின் ஆட்சி (கி.பி 1215-1255) தமிழரின் உதவியுடன் தமிழ்ப்படைகளின் உதவியுடன் நடை பெற்ற ஆட்சியாகும்.

கலிங்கனான மாகனின் ஆட்சியை சாவக அரசன் சந்திரபானு முறியடித்தான். பாண்டியரின் உதவியுடன் தான் மாகனின் ஆட்சியை சந்திரபானு முறியடித்தான். பாண்டியரின் படைகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தப் படையெடுப்புக்களால் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்ட ஆட்சி தடைப்பட்டது. சிங்கள் மன்னர்கள் தெற்கு நோக்கிச் சென்றார்கள் . தங்கள் தலைநகரை தெற்கு நோக்கி மாற்றினார்கள். தம்பதெனியா, யாப்பகூவா போன்று தலைநகரங்கள் எழுந்தன. தீவின் வடக்குப் பகுதிகள் முதலில் மாகனிடமும் பின்னர் சந்திரபானுவிடமும் சென்றடைந்தன. இத் தமிழ் அரசுகளின் மேலாதிக்கம் செலுத்த சிங்கள மன்னர்களால் முடியவில்லை.

பாண்டியப் படைகளுடன் இலங்கை வந்த சாவக அரசன் சந்திரபானு (கி.பி.1255-1262) பாண்டியரின் மேலாட்சியை ஏற்றுக்கொண்டான. பாண்டிய அரசின் பகுதியாக தனது ஆட்சியை அமைத்தான். பாண்டிய மன்னனுக்கு திறை செலுத்தினான்.

சந்திரபானு சிறிதுசிறிதாக வலிமையைப் பெருக்கினான். படைப்பலத்தைப் பெருக்கினான். தனது நாட்டின் ஆட்சிமுறையைச் சீராக்கினான். காலம் செல்லச் செல்ல அவன் வலிவு பெருகப் பெருக பாண்டியரின் மேலாட்சியை ஏற்றுக்கொள்ள மறுத்தான். பாண்டியருக்கு திறை செலுத்த மறுத்தான். தமிழீழ மன்னன் எனத் தன்னை பிரகடனப்படுத்தினான்.

பாண்டிய நாட்டின் மன்னனான சடையவர்மன் சுந்தரபாண்டியன் இதற்று ஒப்பவில்லை. தனது இணையரசன் வீரபாண்டியன் தலைமையில் படையை அனுப்பி சந்திரபானுவை போரில் முறியடித்தான். தமிழீழ அரசின் மீதான மேலாட்சியை பாண்டியர் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டிய மேலாட்சி கைவிடப்பட்டது. பாண்டிய அரசு வலிமை குன்றப் பாண்டிய அரசரால் அனுப்பப்பட்ட படைத்தளபதிகள் தம்மைத்தாமே மன்னராகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். தமிழீழ் அரசசை அமைத்தனர். கி.பி.1282ல் ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழீழ மன்னர்களாக எழுந்தனர்.

## ஆரியச்சக்கரவர்த்திகள்

பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய அரசு சீர்குலைந்து முஸ்லிம்களால் அடிமைப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் தமிழீழ அரசு தன்னாட்சி பெற்ற அரசாக ஆட்சியுரிமையுடைய அரசாக ஒப்பாரும் மிக்காரும் இல்லா இறையையுடைய அரசாக எழுந்தது.

இவன்பற்றுற்றா நாடுகள் பல கண்ட பெரியார் அறிஞர் கி.பி.1344ல் இவர் தமிழீழ மன்னனுடைய 100 கப்பல்கள் கூட்டாக அராபிய நாட்டிற்குப் பயணமானதைக் கண்டார். 100 கப்பல்களும் ஒரே சமயத்தில் வர்த்தகப் பொருட்களை ஏற்றிச் சென்றன. தனது பயணக் கட்டுரையில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பதினான்காம் நூற்றாண்டில் தமிழீழ மன்னர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் செல்வம் செழித்த, வலிமை வேரூன்றிய, படைபெருகிய ஆட்சியை மேற்கொண்டனர். கண்டி அரசரும், கீழ் நாட்டு சிங்கள அரசரும் தமிழீழ மன்னர்களின் மேலாணையை ஏற்றுக்கொண்டனர். திறை செலுத்தினர். இதை சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

மன்னார் வளைகுடாவில் முத்துக்குளிப்பு நடைபெற்றது. தமிழீழ மன்னரின் ஆணையின் கீழ் முத்துக்குளிப்பு நடைபெற்றது. இதனால் தமிழீழ மன்னர்கள் செல்வம் மிகையாகப் பெற்றிருந்தனர். நூற்றுக்கணக்கான கப்பல்களை வைத்திருந்து வாணிபத்தில் ஈடுபடுத்தினர். அராபிய நாடு, கடாரம், சாவகம் போன்ற கடல் கடந்த நாடுகளுடன் தொடர்பு கொண்டு இருந்தனர்.

கி. பி. 1327இல் பாண்டியரின் ஆட்சி வீழ்ச்சியுற்றது. தமிழீழத்தில் மட்டுமே தமிழரசர்கள் ஆட்சி செய்தனர். இதனால் பரிசில்பெற விளைந்த தமிழ்நாட்டு தமிழ்ப் புலவர்கள் கூடத் தமிழ் ஈழ மன்னர்களையே நாடிவந்தனர். தமிழ் ஈழ மன்னர்கள் பன்மொழிப் புலமை பெற்றும் மருத்துவ விற்பன்னர்களாகவும் இருந்தனர். சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர்.

ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரையைச் சேர்ந்த கடைசி மன்னன்தான் சங்கிலி. 1619ஜூனில தமிழ் ஈழத்தின் இறைமையையும் ஆட்சியுரிமையையும் தனது கடைசி மூச்சு வரை விட்டுக் கொடுக்க முடியாது என்றான் இந்த மன்னன். தமிழ் மக்களின் இறைமையும் ஆடசியுரிமையும் இடையீ டின்றித் தமிழ் மன்னர்களால் அனுபவிக்கப்பட்டதைச் சங்கிலி உணர்ந்திருந்தான். சங்கிலி மன்னன் சிறைப்பிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டதன் மூலம் தமிழ் ஈழத்தின் இறைமையும் ஆட்சியுரிமையும் போர்த்துக்கேய அரசனைச் சென்றடைந்தது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில மீண்டும் எழுந்த தமிழ்ஈழ அரசு பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயரிடம் அடிமைப்பட்டது. தொடர்ச்சியாகக் குலவழி முறையில் ஆரியச்சக்கரவர்த்திகள், ஏறத்தாழ முன்னூற்றைம்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தனர்.

## தமிழ் ஈழம்–நாடு

ஈழத்தில தமிழர் ,தனியான வாழ்விடங்களைக் கொண்டுள்ளனர். தமக்கென நிலப் பரப்பைக் கொண்டுள்ளனர். தீவின் மற்றுமொரு நாட்டினமான சிங்கள மக்களும் தமக்கெனத் தனியான தாயகத்தைக் கொண்டுள்ளனர்.

(தொடரும்)

# தெகிவளையில் கொல்லப்பட்டவர் இராணுவ உளவாளியாக இருந்தவர்

(கொழும்பு)

தெஹிவளையில் கடந்த வியாழக் கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் புளொட் உறுப்பினரான வேலாயுதம் தயாளகுமார் முக்கியமான இராணுவ உளவாளி என தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் கொழும்பில் புளொட் மோகன் எனப்படும் கந்தையா யோகராஜா சுட்டுக் கொல்லப்பட்ட பினபு இவ் உளவாளியாகச் செயற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும வன்னிப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட ஊடுருவல் தாக்குதல் சம்பவங்களுக்கு உரிய தகவல்கள் இவரால் வழங்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இவர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு சாதாரண நபராகவே சென்று விபரங்களைச் சேகரித்துள்ளார்.

கொழும்பிலும் இப்படியான விபரங்களை சேகரித்துள்ளதாகக் கூறப்படும் இவரது தந்தை கே. வேலாயுதம் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு அலுவலகத்தில் வீ. ஆனந்தசங்கரியின் செயலாளராக பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது. (க)

# மன்னாரில் மனித புதைகுழிகள் தோண்டுவதற்கு நீதிவான் அனுமதி!

(மன்னார்)

மன்னார் உயிலங்குளத்தில் உளள 215 வது இராணுவ முகாம் பகுதியில் சந்தேகத்திற்கிடமான பகுதிகள் தோண்டப்படவுள்ளன.

இதற்கு மன்னார் நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா அனுமதி வழங்கியுள்ளார்.

இரகசியப் பொலிஸார், மாவட்ட நீதிமன்றத்தில் முகாம் அமைந்துள்ள பகுதியில் பலர் கொலை செய்யப்பட்டு புதைக்கப் பட்டிருப்பதாக தகவல் கிடைத் திருப்பதாகவும், அப்பகுதியில் சந்தேகததிற்கிடமான பகுதிகளைத் தோண்டுவதற்கு அனுமதிக்கு மாறும் கேட்டுக்கொண்டனர்.

இவர்களின் இவ்வேண்டு கோளுக்கிணங்கவே நீதிவான் இவ் அனுமதியினை வழங்கினார்.

பல்வேறு வாகனக்கடத்தல், படுகொலை ஆகியன தொடர்பாக குறித்த முகாமில் கடமையாற்றிய மேஜர் அனுரத்த சம்பிக்க என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து கிடைத்த தகவலையடுத்து, அநுராதபுரத்தைச் சேர்ந்த வாகன சாரதி ஒருவரின் சடலம், அவர் கடமையாற்றிய 215 வது முகாமின் வளவில் இருநது தோண்டியெடுக்கப்பட்டது.

இந்த முகாம் வளாவில் இன்னும் பல சடலங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரிலேயே இரகசியப் பொலிஸார் நீதிபதி யின் அனுமதியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-121)

# பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், பாடப்புத்தகங்கள் இம்மாத இறுதியில் வழங்கப்படும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளும், அடுத்த ஆண்டிற்கான பாடப்புத்தகங்களும் எதிர் வரும் டிசம்பர் மாத முடிவுக்குள் விநியோகிக்கப்படும் என்று கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாண சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைச் சீருடைகளுக்கென அரசாங்கம் நூறு கோடி ரூபாவை செலவிடுகின்றது. பாடப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கென மேலும் 65 கோடி ரூபா செலவிடப்படுகின்றது.

பாடப்புத்தகங்களில் 40 சதவீதமானவை ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுவிட்டன.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கான பாடப்புத்தக விநியோகம் இம்மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(க-121)

# ராஜரட்ணத்தின் பெயரைக் கூறி புலிகளை பயங்கரவாதிகளாகக் காண்பிக்க முயற்சி

(லண்டன்)

டென்மார்க்கில் வாழ்ந்து வரும் தமிழர்களை பயங்கரவாதிகள் என காட்டிக்கொடுத்துவரும் மதிகுமாரதுரை போன்றவர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக ஓர் புதிய செயலை ஆரம்பிததுள்ளார்கள்.

ஈராக்கில் கைதாகியுள்ள தமிழ் மகளை மீட்பதற்கு மனிதநேய அடிப்படையில்கையெழுத்து வேட்டை எனக் கூறிக்கொண்டு, டென் மார்க்கில் தமிழ்தேசியத்தைத் தடுப்பதற்கும் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் எனவும் காட்டிக்கொள்வதறகு மக்கள் ஆதரவைத் திரட்டி வருகிறார்கள். இதற்காக உலக மட்டத்தில் கையெழுத்து வேட்டையில் மதிகுமாரதுரை இறங்கியுள்ளார். இவர் கருணாவின் புதிய கட்சியில் டென்மார் பொறுப்பாளர் ஆகவும் ஊடகப்பொறுப்பாளர் ஆகவும் பதவி வகிக்கின்றார்.

தமிழ் மக்களுடைய நாடுகள் அவர்களின் மின்னஞ்சல் முகவரி முழுப்பெயர் போன்றவற்றையும் திரட்டிவரும் இவர், தமிழ்த் தேசியம் தமது பக்கம் நிற்பதாக காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தமிழ்த் தேசியத்தை நேசிப் போர் தயவு செய்து இப்படிவத்தில் கையொப்பம் இடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றதுடன், அவ்வாறு கைச்சாத்திட்டவர்கள தங்கள் மின்னஞ்சல் முகவரியை உடனடியாக மாற்றும் படி வேண்டப்படுகிறார்கள்.

இவர்களின் மின்னஞ்சல் முகவரி, கணணி முகவரி அனைத்தும் அவர்களால் இரகசியமாகப் பதிவு செய்யப்படுகிறதாகவும் கூறப்படுகிறது. (க)

# நினைவஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயகக் கட்சியின் மறைந்த அரசியல் குழு உறுப்பினர் சி. நவரத்தினத்தின் ஒரு மாத நினைவஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கநதா் மடம் ஆத்தி சூடி வீதி, கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்தில்வேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

கட்சியினதும் பொது அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் பலரும் உரையாற்றவுள்ள இந் நிகழ்வில், "பொதுவுடமைப் போராளியின் நினைவுகள்" என்னும் நினைவு நூல் வெளி யிடப்படும். தொடர்ந்து 'மனிதம மண்ணில் உயரும் வரை' எனும் தலைப்பிலான கவிதாஞ்சலியும்இடம்பெறும். (க)

# ...ர் பெயர் விபரம் – கார்த்திகை 2004

84. யா/கோ/2129 திரு.சுப்பிரமணியம் தசரதன்
85. யா/கோ/2153 திரு.சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை
86. யா/கோ/2246 திரு.வேலுப்பிள்ளை கந்தவனம்
87. யா/கோ/2311 திரு.சின்னவன் ஆண்டி
88. யா/கோ/2328 திரு.கதிரன் கந்தையா
89. யா/கோ/2341 திரு.கதிரவேலு நடராசா
90. யா/கோ/2344 திரு.கதிரன் நாகமுத்து
91. யா/கோ/2376 திரு.கதிரன் சீனியன்
92. யா/கோ/2411 திரு.முருகேசு மாணிக்கம்
93. யா/கோ/2418 திரு.சிதம்பரம் பொன்னன்
94. யா/கோ/2504 திரு.தில்லையர் சுந்தரம்
95. யா/கோ/2552 திரு.கதிர்காமு வேலுப்பிள்ளை
96. யா/கோ/2558 திரு.வயிரமுத்து மயில்வாகனம்
97. யா/கோ/2575 திரு.காசி ஆசைப்பிள்ளை
98. யா/கோ/2576 திரு.செல்லத்துரை பாலசிங்கம்
99. யா/கோ/2651 திருமதி.அழகரத்தினம் முருகேசு
100. யா/கோ/2659 திரு.இராமு மார்க்கண்டு
101. யா/கோ/2679 திரு.நாகலிங்கம் நடராசா
102. யா/கோ/2744 திருமதி. சின்னத்தம்பி சாம்பசிவம்
103. யா/கோ/2752 திரு.சின்னட்டி சுந்தரம்
104. யா/கோ/2805 திரு.வேலுப்பிள்ளை செல்லத்தம்பி
105. யா/கோ/2826 திரு.பொன்னம்பலம் சின்னத்துரை
106. யா/கோ/2832 திரு.பரமு தேவராசா
107. யா/கோ/2863 திருமதி.தெய்வானைப்பிள்ளை நடராசா
108. யா/கோ/2865 திரு.நாகமுத்து தம்பிராசா
109. யா/கோ/2974 திருமதி. சிவகாமிப்பிள்ளை தியாகராசா
110. யா/கோ/2979 திரு.அருணாசலம் சிவானந்தன்
111. யா/கோ/3017 திரு.வேலுப்பிள்ளை தம்பிராஜா
112. யா/கோ/3109 திருமதி.மகேஸ்வரி வெற்றிவேலு
113. யா/கோ/3163 திருமதி.புவனேஸ்வரி கனகரத்தினம்
114. யா/கோ/3207 திரு.கார்த்திகேசு சிற்றம்பலம்
115. யா/கோ/3239 திரு.கந்தையா சுப்பிரமணியம்
116. யா/கோ/3249 திருமதி.சிதம்பரேஸ்வரி குமாரசாமி
117. யா/கோ/3257 திரு.கந்தையா சிவஞானம்
118. யா/கோ/3263 திரு.முத்தையா சுந்தரம்
119. யா/கோ/3283 திரு.சுந்தரம் தர்மலிங்கம்
120. யா/கோ/3303 திரு.கார்த்திகேசு வல்லிபுரம்
121. யா/கோ/3307 திருமதி.விஜயலட்சுமி சிவசங்கரநாதன்
122. யா/கோ/3331 திரு.சிவஞானம் கனகரத்தினம்
123. யா/கோ/3334 திரு.சின்னத்தம்பி கந்தையா
124. யா/கோ/3338 திரு.சின்னவன் குட்டியன்
125. யா/கோ/3371 திரு.அப்புக்குட்டி நல்லதம்பி
126. யா/கோ/3413 திரு.வேலுப்பிள்ளை சுந்தரம்
127. யா/கோ/3428 திரு.செல்லப்பா சிவசுப்பிரமணியம்
128. யா/கோ/3435 திரு.தம்பையா செல்லத்துரை
129. யா/கோ/3495 திருமதி. தங்கரத்தினம் வெற்றிவேலு
130. யா/கோ/3525 திரு.செல்லையா கணேசசாமி
131. யா/கோ/3593 திரு.செல்லப்பா நடராஜா
132. யா/கோ/3597 திரு.இராமலிங்கம் நடராசா
133. யா/கோ/3599 திரு.சம்பந்தர் நாகலிங்கம்
134. யா/கோ/3600 திரு.இளையதம்பி நடராசா
135. யா/கோ/3606 திருமதி. பாக்கியலக்சுமி பாலசிங்கம்
136யா/கோ/3612 திரு.வேலுப்பிள்ளை பரமநாதன்
137யா/கோ/3626 திருமதி. இரத்தினேஸ்வரி இராசரட்ணம்
138. யா/கோ/3647 திரு. தம்பையா சுந்தரலிங்கம்
139. யா/கோ/3693 திரு. இராயேந்திரா தம்போல்
140. யா/கோ/3836 திருமதி. மேரிஜோசபின்ராணி நீக்கிலாஸ்
141. யா/கோ/3873 திருமதி. பூரணம்மா சரவணமுத்து
142. யா/கோ/3914 திரு.பொன்னம்பலம் சண்முகதாசன்
143. யா/கோ/3958 திரு.இளையதம்பி சின்னத்தம்பி
144. யா/கோ/ 4007 திரு.குட்டியர் வேலுப்பிள்ளை
145. யா/கோ/4041 திரு.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
146. யா/கோ/4061 திரு.நாகமுத்து நல்லையா
147. யா/கோ/4074 திரு.கந்தையா இராமசாமி
148. யா/கோ/4085 திரு.கந்தையா சின்னத்தம்பி
149. யா/கோ/4098 திரு.இராமலிங்கம் செல்லத்தம்பி
150. யா/கோ/4122 திரு.இளையதம்பி வேலுப்பிள்ளை
151. யா/கோ/4132 திரு.சின்னையா ஆறுமுகம்
152. யா/கோ/4169 திரு.கணபதிப்பிள்ளை கதிர்காமு
153. யா/கோ/4170 திரு.இளையதம்பி கணபதிப்பிள்ளை
154. யா/கோ/4176 திருமதி. குழந்தையார் கைலாயபிள்ளை
155. யா/கோ/4248 திரு.முருகேசு பெரியதம்பி
156. யா/கோ/4299 திரு.வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
157. யா/கோ/4304 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியயம்
158. யா/கோ/4321 திரு.செல்லத்துரை சிவலிங்கம்
159. யா/கோ/4357 திருமதி.வள்ளிப்பிள்ளை வீரசிங்கம்
160. யா/கோ/4404 திரு.பாலர் பொன்னம்பலம்
161. யா/கோ/4411 திரு.மயில்வாகனம் இராசரத்தினம்
162. யா/கோ/4429 திரு.கணபதிப்பிள்ளை சரவணமுத்து
163. யா/கோ/4460 திரு.ஆறுமுகம் தாணையா
164. யா/கோ/4475 திரு.விஸ்வலிங்கம் அம்பலவாணர்
165. யா/கோ/4484 திரு.கணபதி கந்தையா
166. யா/கோ/4491 திரு.குட்டியன் மாணிக்கம்
167. யா/கோ/4499 திரு.சிவகுருநாதன் இராஜதுரை
168. யா/கோ/ 4507 திரு.செல்லத்துரை சண்முகநாதன்
169. யா/கோ/4523 திரு.வைரவன் செல்லத்துரை
170. யா/கோ/4570 திரு.சுந்தரம்பிள்ளை சபாநயகம்
171. யா/கோ/4607 திரு.இளையதம்பி தம்பு
172. யா/கோ/4613 திரு.தங்கராஜா கஜமுகன்
173. யா/கோ/4633 திரு.கார்த்திகேசு குமரேசு
174. யா/கோ/4643 திரு.மயில்வாகனம் கந்தையா
175. யா/கோ/4787 திரு.வெள்ளையன் சங்கரப்பிள்ளை
176. யா/கோ/4837 திரு.கதிரவேலு சபாபதி
177. யா/கோ/4868 திரு.கனகசபை வேலுப்பிள்ளை
178. யா/கோ/4876 திரு.பூதத்தம்பி வீரசிங்கம்
179. யா/கோ/4886 திருமதி.முத்தம்மா கணபதி
180. யா/கோ/4888 செல்வி.விஜயலட்சுமி சிவகுரு
181. யா/கோ/4906 திரு.நல்லதம்பி கதிரமலை செல்லத்துரை
182. யா/கோ/4929 திரு.அரியகுட்டி அருளானந்தன்
183. யா/கோ/4946 திரு.கந்தையா சபாரெத்தினம்
185. யா/கோ/4985 திரு.பண்டாரி கிட்டினர்
186. யா/கோ/4996 திருமதி.குணமணி தர்மலிங்கம்
187. யா/கோ/5005 திரு.சுப்பர் நாகலிங்கம்
188. யா/கோ/5021 திரு.செல்லையா தில்லைநாதன்
189. யா/கோ/5031 திரு.முத்து மாணிக்கமுத்து மயில்வாகனம்
190. யா/கோ/5047 திருமதி.தங்கம்மா ஆறுமுகம்
191. யா/கோ/5178 திரு.கனகசபை இரத்தினசபாபதி
192. யா/கோ/5207 திரு.நாகமுத்து சின்னத்துரை
193. யா/கோ/5222 திருமதி. சோதிரத்தினம் பொன்னுத்துரை
194. யா/கோ/5247 திருமதி. தவமணி சுப்பையா
195. யா/கோ/5300 திரு. சின்னத்துரை ஆனந்தகுமாரசாமி
196. யா/கோ/5330 திரு.ஐயம்பிள்ளை கந்தையா
197. யா/கோ/5331 திரு.கந்தையா கதிரவேலு
198. யா/கோ/5365 திரு.கோவிந்தபிள்ளை நடராசா
199. யா/கோ/5366 திரு.கணபதிப்பிள்ளை நிற்சிங்கம்
200. யா/கோ/5381 திரு.சுப்பிரமணியம் பொன்னையா
201. யா/கோ/5404 திரு.தம்புறிச்சேட் செல்வரத்தினம்
202. யா/கோ/5441 திரு.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம
203. யா/கோ/5450 திரு.சுப்பிரமணியம் சின்னத்தமபி
204. யா/கோ/5516 திரு.நாகலிங்கம் கனகலிங்கம்
205. யா/கோ/5521 திரு.கணபதிப்பிள்ளை முத்துத்தம்பி
206. யா/கோ/5547 திருமதி.பூரணம் சீனி
207. யா/கோ/5569 திரு. அழகரத்தினம் இரத்தினசிங்கம்
208. யா/கோ/5585 திருமதி.சிவபாக்கியம் சுப்பையா
209. யா/கோ/5591 திருமதி.சின்னம்மா நல்லையா
210. யா/கோ/5594 திருமதி.சவுந்தரம் இராமலிங்கம்
211. யா/கோ/5612 திரு.ஆறுமுகம் சோமசுந்தரம்
212. யா/கோ/5617 திரு.திருநாவுக்கரசு சிவராசா
213. யா/கோ/5619 திரு.தில்லையம்பலம் தாமோதரம்பிள்ளை
214. யா/கோ/5620 திரு.கந்தையா தில்லையம்பலம்
215. யா/கோ/5635 திரு.கார்த்திகேசு தாமோதரம்பிள்ளை
216. யா/கோ/5715 திரு.ஞானப்பிரகாசம் விசுவாசம்
217. யா/கோ/5759 திருமதி.கனகம்மா இரத்தினம்
218. யா/கோ/5810 திரு.கந்தையா பஞ்சலிங்கம்
219. யா/கோ/5813 திரு.அப்புக்குட்டி பூபாலசிங்கம்
220. யா/கோ/5849 திரு.சுப்பையா செல்லையா
221. யா/கோ/5851 திரு.செல்லையா சிவப்பிரகாசம்.
222. யா/கோ/5860 திரு.இராமலிங்கம் சிவலிங்கம்
223. யா/கோ/5862 திருமதி. சிவபாக்கியம் செல்லத்துரை
224. யா/கோ/5863 திரு.நாகன் செல்லன்
225. யா/கோ/5884 திருமதி.தையலம்மா சோமசுந்தரம்
226. யா/கோ/5893 திரு.பொன்னையா அன்னலிங்கம்
227. யா/கோ/5951 திரு.சிவகுரு சிவபாதசுந்தரம்
228. யா/கோ/5954 திரு.சின்னையா அழகரத்தினம்
229. யா/கோ/6032 திரு.சின்னத்தம்பி பொன்னுத்துரை
230. யா/கோ/6058 திருமதி.இரத்தினம்மா சுப்பையா
231. யா/கோ/6068 திரு.கந்தையா சுப்பிரமணியம்
232. யா/கோ/6106 திரு.சபாபதிப்பிள்ளை தம்பிராசா
233. யா/கோ/6120 திரு.செல்லையா விஜயரத்தினம்
234. யா/கோ/6186 திருமதி.செல்லம்மா சின்னத்தம்பி
235. யா/கோ/6192 திரு.கந்தையா இராசையா
236. யா/கோ/6222 திரு.பாலகிரு'ணன் ஜெயதீஸ்வரன்
237. யா/கோ/6226 திரு.சிவசுப்பிரமணியம் விஜயகுமார்
238. யா/கோ/6227 திருமதி.பசுபதியம்மா வேலாயுதம்பிள்ளை
239. யா/கோ/6229 திரு.சின்னத்தம்பி. சபாரத்தினம்
240. யா/கோ/6235 திரு.அரியகுட்டி பத்மநாதன்
241. யா/கோ/6240 திருமதி.அருணோதயம் இரஞ்சிதநாயகம்
242. யா/கோ/6248 திருமதி.அன்னலட்சுமி குமாரசுவாமி
243. யா/கோ/6251 திருமதி.தயாமணி அழகரட்ணம்
244. யா/கோ/6408 திரு.வைத்திலிங்கம் இராமசாமி
245. யா/கோ/6447 திரு.ஆர்.ஜெ.வல்லிபுரம் கனகரத்தினம
246. யா/கோ/6463 திரு.சின்னத்துரை கெங்காதரன்
247. யா/கோ/6474 திரு.கந்தையா மார்க்கண்டு
248. யா/கோ/6521 திரு.கந்தையா தம்பிமுத்து
249. யா/கோ/6572 திரு.ஆறுமுகம் தம்பிமுத்து
250. யா/கோ/6574 திருமதி.அன்னப்பிள்ளை சுப்பையா
251. யா/கோ/6591 திரு.பொன்னர் சிவசம்பு
252. யா/கோ/6652 திரு.சின்னத்தம்பி குமாரவேலு
253. யா/கோ/6661 திரு.பண்டாரம் பழனிவேல்
254. யா/கோ/6666 திரு.செல்லப்பா சபாரட்ணம்
255. யா/கோ/6682 திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி
256. யா/கோ/6690 திரு.விசுவலிங்கம் கணேசலிங்கம்
257. யா/கோ/6702 திருமதி.அன்னமலர் அருளம்பலம்
258. யா/கோ/6766 திரு.பொன்னையா செல்லத்துரை
259. யா/கோ/6771 திரு.நாகன் ஏரம்பு
260. யா/கோ/6773 திரு.சோமசுந்தரம் வீரசிங்கம்
261. யா/கோ/6778 திரு.அரியநாயகம் தங்கராசா
262. யா/கோ/6997 திரு.வயிரவிப்பிள்ளை சின்னத்துரை
263. யா//கோ/7003 திருமதி.சின்னத்தங்கச்சி செல்லமுத்து
264. யா/கோ/7044 திரு.தம்பு கந்தசாமி
265. யா/கோ/7066 திரு.முருகேசு தம்பிராசா
266. யா/கோ/7073 திரு.கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
267. யா/கோ/7162 திரு.தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை
268. யா/கோ/7168 திரு.மிசல்ஸ் சாள்ஸ் புஸ்பராசா
269. யா/கோ/7180 திருமதி.எலிபேத்பிள்ளைநாயகம் இராசரெத்தினம
270. யா/ கோ/7196 திருமதி. விமலாதேவி அமுதலிங்கம்
271. யா/கோ/7231 திருமதி. முத்துப்பிள்ளை அந்தோனிப் பிள்ளை
272. யா/கோ/7242 திருமதி.தங்கம் சின்னத்துரை
273. யா/கோ/7249 திரு.சுப்பிரமணியம் அம்பலவாணர்
274. யா/கோ/7260 செல்வி.கிறிஸ்ரிலலிதா ஞானம்
275. யா/கோ/7273 திரு.சண்முகம் சுப்பிரமணியம்
276. யா/கோ/7278 திரு.நரசிங்கம் சின்னத்தம்பி
277. யா/கோ/7443 திருமதி.செல்லம்மா கனகரத்தினம்
278. யா/கோ/7471 திருமதி.துரைச்சாமி செல்லம்மா
279. யா/கோ/7476 திரு.செல்லப்பா சபாரத்தினம்
280. யா/கோ/7498 திரு.சின்னத்தம்பி கந்தையா
281. யா/கோ/7506 திரு.ஆறுமுகம் நாகரத்தினம்
282. யா/கோ/7534 திருமதி. அன்னரத்தினம் ஞானப்பிரகாசம்
283. யா/கோ/7552 திருமதி.சிவக்கொழுந்து சின்னத்துரை
284. யா/கோ/7564 திரு.இளையதம்பி பெஞ்சமின்
285. யா/கோ/7566 திரு.கணபதிப்பிள்ளை அருணாசலம்
286. யா/கோ/7608 திருமதி.பாக்கியம் சுப்பிரமணியம்
287. யா/கோ/7644 திரு.கந்தையா நடராசா
288. யா/கோ/7661 திரு.கந்தர் கணபதி
289. யா/கோ/7667 திருமதி.இராசம்மா செல்வநாயகம்
290. யா/கோ/7669 திரு.கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
291. யா/கோ/7683 திரு. ஐயாத்துரைக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள
292. யா/கோ/7711 திரு.கந்தையா குமாரவேலு
293. யா/கோ/7767 திரு.இளையதம்பி நடராசா
294. யா/கோ/7777 திருமதி.முத்தம்மா சங்கரப்பிள்ளை
295. யா/கோ/7779 திரு.சின்னப்பு இரத்தினம்
296. யா/கோ/7798 திருமதி.இரத்தினம் பூரணச்சந்திரன்
297. யா/கோ/7826 திரு.பெரியதம்பி நடராசா
298. யா/கோ/7836 திருமதி.நாகம்மா செல்லத்துரை
299. யா/கோ/7837 திருமதி.அன்னபூரணம் செல்லையா
300. யா/கோ/ 7879 திருமதி.செல்லம்மா சுப்பிரமணியம்
301. யா/கோ/7895 திரு.விஸ்வலிங்கம் முத்துவேலு
302. யா/கோ/ 7932 திருமதி.நாகமுத்து தம்பன்
303. யா/கோ/7933 திருமதி.சிவக்கொழுந்து சுந்தரம்
304. யா/கோ/ 7953 திரு.கந்தையா கனகலிங்கம்
305. யா/கோ/8037 திரு.தம்பிமுத்து இராசரத்தினம்
306. யா/கோ/8054 திருமதி.இலட்சுமிப்பிள்ளை தம்பிமுத்து
307. யா/கோ/8061 திருமதி.செல்லம்மா வீரசிங்கம்
308. யா/கோ/8065 திரு.முருகுப்பிள்ளை செல்லத்துரை
309. யா/கோ/8094 திருமதி.சின்னம்மா கதிரேசு
310. யா/கோ/8111 திருமதி.புவனேஸ்வரி கார்த்திகேசு
311. யா/கோ/8183 திருமதி.வேலுப்பிள்ளை பாக்கியம்
312. யா/கோ/8247 திரு.சின்னட்டி சின்னவன்
313. யா/கோ/8256 திரு.தாமோதரம்பிள்ளை வேல்நம்பி
314. யா/கோ/8299 திரு.சின்னவர் கணபதிப்பிள்ளை
315. யா/கோ/8318 திரு.சின்னப்பு செல்லத்துரை
316. யா/கோ/8329 திரு.சிவப்பிரகாசம் கந்தையா
317. யா/கோ/8337 திருமதி.நாகம்மா கந்தர்
318. யா/கோ/8357 திரு.பண்டாரம் சின்னத்தம்பி
319. யா/கோ/8361 திருமதி. மாணிக்கம் சின்னத்தம்பி
320. யா/கோ/8381 திரு.கந்தர் ஐயாத்துரை
321. யா/கோ/8483 திருமதி.சரஸ்வதி நல்லதம்பி
322. யா/கோ/8497 திரு.கந்தர் செல்லத்துரை
323. யா/கோ/8526 திரு.கந்தையா தம்பிராசா
324. யா/கோ/8588 திரு.சுப்பையா குணரத்தினம்
325. யா/கோ/8598 திரு.இளையதம்பி ஆறுமுகம்
326யா/கோ/8604 திரு.பொன்னையா துரைரத்தினம்
327யா/கோ/8611 திரு.வேலுப்பிள்ளை தம்பையா
328யா/கோ/8640 திரு.கார்த்திகேசன் குமாரசாமி
329யா/கோ/8668 திரு.கந்தன் பொன்னன்
330யா/கோ/8686 திரு.சுப்பர் சின்னப்பு
331யா/கோ/8699 திருமதி.இராசம்மா சதாசிவம்
332யா/கோ/8700 திரு.தாமோதரம்பிள்ளை தம்பிமுத்து
333யா/கோ/8701 திரு.முத்துச்சாமி குமாரசாமி
334. யா/கோ/8714 திரு.கந்தன் பரமு
335. யா/கோ/8786 திரு.கந்தையா இராசரத்தினம்
336. யா/கோ/8804 திருமதி.மகேஸ்வரி இராசரத்தினம்
337. யா/கோ/8820 திரு.சின்னத்தம்பி இரத்தினம்
338. யா/கோ/8821 திரு.செல்லர் கணபதிப்பிள்ளை
339. யா/கோ/8827 திரு.சின்னத்தம்பி சின்னத்துரை
340. யா/கோ/8840 திருமதி.சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம
341. யா/கோ/8855 திருமதி.சிவக்கொழுந்து சின்னத்தம்பி
342. யா/கோ/8894 திரு.நாகன் கிருஸ்ணர்
343. யா/கோ/8940 திருமதி.வள்ளிப்பிள்ளை செல்லத்துரை
344. யா/கோ/8957 திரு.செல்லையா சதாசிவம்
345. யா/கோ/9028 திருமதி.பரிமளம் கதிரவேலு
346. யா/கோ/9038 திரு.சின்னத்தம்பி கந்தையா
347. யா/கோ/9118 திருமதி.மகேஸ்வரி சபாரட்ணம்
348. யா/கோ/9198 திருமதி.கௌரியம்மன் சுப்பிரமணியம்
349. யா/கோ/9216 திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
350. யா/கோ/9221 திருமதி.நாகம்மா கதிரிப்பிள்ளை
351. யா/கோ/9231 திரு.மாணிக்கம் சின்னத்துரை
352. யா/கோ/9252 திருமதி.தங்கம்மா ஆறுமுகம்
353. யா/கோ/9304 திருமதி.றோஸ்பரிமளநாயகம் அற்புதராசா
354. யா/கோ/9321 திரு.வீரபாகு பொன்னுத்துரை
355. யா/கோ/9329 திருமதி.இராசம்மா மயில்வாகனம்
356. யா/கோ/9411 திருமதி.பாக்கியம் செல்லையா
357. யா/கோ/9494 திரு.இளையவி சின்னத்துரை
358. யா/கோ/9515 திருமதி.முத்து இளையதம்பி
359. யா/கோ/9532 திரு.வேலுப்பிள்ளை அருணாசலம்
360. யா/கோ/9533 திரு.நாகமுத்து ஆறுமுகம்
361. யா/கோ/9555 திருமதி.நாகரெத்தினம் தம்பிராசா
362. யா/கோ/9565 திரு.நாகன் கணபதி
363. யா/கோ/9573 திரு.காசிப்பிள்ளை சபாரெட்ணம்
364. யா/கோ/9634 திருமதி.ஞானலக்குமி பொன்னம்பலம்
365. யா/கோ/9647 திரு.முருகேசு இராசா
366. யா/கோ/9664 திருமதி.பாக்கியம் கந்தையா
367. யா/கோ/9720 திருமதி.சரஸ்வதி பஞ்சாட்சரம்
368. யா/கோ/9721 செல்வி.வீணாகானவிதூஷ்ணி சுப்பிரமணியதேசிகர்
369. யா/கோ/9736 திருமதி.ஞானபூங்கோதை கனகரத்தினம்
370. யா/கோ/9774 திரு.சின்னையா செல்லையா
371. யா/கோ/9844 திருமதி.செல்வமலர் செல்லையா
372. யா/கோ/9846 திரு.கதிர்காமு சபாபதி
373. யா/கோ/9887 திருமதி.கண்மணி சபாபதி
374. யா/கோ/9931 திரு.தவசிப்பிள்ளை இராமலிங்கம்
375. யா/கோ/9935 திரு.கணபதி தம்பையா
376. யா/கோ/9960 திரு.சபாபதி பாலசிங்கம்
377. யா/கோ/9973 திரு.வீரவாகு கந்தையா
378. யா/கோ/10067 திரு.நாகமணி கந்தையா

*(தொடரும்)*

## இன்று ஒரு தகவல்

# பூட்டும் சாவியும்

ஒருவர் அவசரமாக பொலிஸ் நிலையத்திற்கு ஓடிக்கொண்டிருந்தார்."என்ன சார் விஷயம்?" என்று எதிரில் வந்த ஒருவர் கேட்டார்." ஒரு திருட்டுச் சம்பவம் நடந்து விட்டது. சார்... அது தான் புகார் செய்யப்போகிறேன்" என்றார். " அவசரமாகப் போக வேண்டுமென்றால் உங்கள்காரில்போகலாமே" என்றார் மற்றவர். "அது தானே முடியாது " என்றார் இவர். 'ஏன்?' என்று கேட்டார் அவர். "திருட்டுப் போனதே எனது கார்தானே'' என்றார் இவர்.

இந்தக் கார் திருட்டு இங்கு மட்டுமில்லை வெளி நாடுகளிலும் மிகவும் சாதாரணமாக நடக்கிறதாம். இதைத் தடுப்பதற்கு என்ன வழி? என்று யோசித்துப் பார்த்துவிட்டு அமெரிக்காவில் இலத்திரனியல் கார்ச்சாவி என ஒன்றைக் கண்டுபிடித்திருக்கின்றனராம்.

இந்த சாவி எப்படிப்பட்டதென்றால்... இதில் உள்ள இலத்திரனியல் செயன் முறை சாரதி **Steering Wheel** கா திறப்பு இதில் இணைக்கப்பட்டிருக்கும். திறப்பை இணைத்தவுடன் கூடுதல் அலை நீளம் உள்ள வானலை குறியீடுகள் சாரதியின் கைப் படியில் உள்ள சிஸ்டத்துடன் மோதி சாரதிக்கு சிக்னல் கொடுக்கும். இந்த சிக்னல் கிடைத்தவுடனேயே சாரதி காரைச் செலுத்த முடியாது. உரிய பதிலைச் சாரதி கொடுத்தால் தான் காரைச் செலுத்த முடியும் அப்போது தான் அதிலுள்ள கணனி காரைச் செலுத்த அனுமதிக்கும். கள்ளத் திறப்பு போட்டு திறக்க முடியாது.

இந்த இலத்திரனியல் திறப்பு சிஸ்டத்தில் ஒவ்வொன்றுக்கும் அலைநீளம் அதனால் காரைத் திருட நினைப்பவர்கள் சாவியைப் போட்டுவிட்டுச் சரியான பதில் கொடுக்க முடியாது. அதுமட்டுமல்ல கள்ளத் திறப்புப போட்டால் கார் பீப்பீங் என்று கத்த ஆரமபித்து விடும். உடனே திருடன் ஓடித்தப்பி விடுவான் அல்லது அகப்பட்டுக்கொள்வான். பாருங்கள்... இந்தக் காலத்தில் திருடனை எப்படியெல்லாம் சமாளிக்க வேண்டியிருக்கின்றதென்று.

லண்டனிலுள்ள பாதுகாப்பு நிறுவனம் இலத்திரனியல் பூட்டும், சாவியும் உருவாக்கியுள்ளது. அந்தப்பூட்டுத் திறப்பிற்கு **Eloctro** என்று பெயராம். சாவியின் நுனியில் ஒரு சிலிக்கான் சில் இருக்கும். அதில் கோடிக்கணக்கான இலக்கங்களைப பதித்து வைக்கலாம். ஒரு மில்லியன் என்பது நூறு கோடி. இது போல் 70 ஆயிரம் மில்லியன் கோடி என்றால் எவ்வளவு? அவ்வளவு நம்பரையும் இதில் பதிய வைக்க முடியும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது ஒரு குறிப்பிட்ட இலக்கம் பதித்திருக்கும் திறப்பை பூட்டுக்குள் நுழைக்கிறோம். உடனே பூட்டில் உள்ள மின்கலத்தின் உதவியால் மின்காந்த மண்டலம் உருவாகும். இப்போது சாவியில் பதிந்திருக்கும் எண்ணை பூட்டில் உள்ள கணனிச் சில் படித்துப் புரிந்து கொள்ளும். ஏற்கனவே எந்த இலக்கம் உள்ள சாவி வந்தால் கதவைத் திறக்க வேண்டுமோ அந்த சாவிகளுக்கு மட்டும் பூட்டுத் திறக்கும். இல்லா விட்டால் கதவைத் திறக்க முடியாது.

இதல் ஒரு வசதி என்னவென்றால் ஒரே பூட்டை ஒன்றுக்கு மேற்பட்ட சாவியைப் பயன் படுத்தித் திறக்கலாம. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இலக்கம் அதனால் ஒரு சாவி தொலைந்து போனால்... அந்த சாவயின் இலக்கத்தை மட்டும் பூட்டில் அழித்து விடலாம். அதனால் தொலைந்து போன சாவி வேறு யாருடைய கையில் கிடைத்தாலும் அவர்கள் அதைப் பயன்படுத்தி இந்தப் பூட்டைத் திறக்க முடியாது. அதனால் அதை விட இது பாதுகாப்பு.

ஒரு கணவனும் மனைவியும் வீட்டைப் பூட்டி விட்டு படம் பார்க்கப் போனார்கள். இரவு பத்து மணிக்கு மேல் திரும்பி வந்தார்கள். அந்தக் கணவன் சொன்னான்" இதோ பார்... தவறுதலாக நம் வீட்டுச் சாவியைத் திரையரங்கில் தொலைத்து விட்டேன. அங்கே அதை உன்னிடம் கூறவில்லை. இப்போது இங்கு வந்த பின்பு தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது'' என்றான்." என்ன சொல்கிறீர்கள்? " என்றார் மனைவி. " சாவி தான் காணாமல் போனது என்ற கவலைப்பட்டேன். இங்கே வந்து பார்த்தால் பூட்டும் காணாமல் போயிருக்கிறது அதனால் நல்லதாகி விட்டது கதவைத் திறப்பது ஒன்றும் கஷ்டமில்லையே" என்கிறான் இவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

### அரசுக்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையில்

# பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என்பதை உறுதியாக எதிர்பார்க்க முடியாதுள்ளது

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இரு தசாப்தகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்பதை உறுதியாக எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான ஆதரவினையும் ஊக்குவிப்பையும் வழங்கலாமே தவிர இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்வுகளைத் திணிக்கவோ, தலையீடுகளை மேற்கொள்ளவோ கூடாது என விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர். இதனையடுத்தே அவர் இந்தக்கருத்தினை அறிக்கையின் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இலங்கை வரும் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோரைச் சந்தித்து உயைாடவுள்ளார்.

இதேவேளை, பேச்சுவாாத்தைகள், சமாதான முயற்சிகள் குறித்து குழப்பத்தை ஏற்படுத்தும் கட்சிகள் மத்தியில் பேச்சுவார்த்தை அவசியமா? என்பது குறித்து கேட்கப்படும் என்று நோர்வே குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும் இரு தரப்பினரும் யுத்த நிறுத்தத்தைத் தொடாந்து கடைப்பிடித்து வருவது குறித்து நோர்வே மகிழ்ச்சி தொிவித்துள்ளது. இதனிடையே பேச்சுவாாத்தைகள் மீள ஆரம்பிக்கப்படாமல் தொடாந்து இழுத்தடிக்கப்படடு வருவது குறீத்து இலங்கைக்கான கூடுதல் உதவி வழங்கும் நாடுகளில் ஒன்றான ஜப்பான் கவலை வெளியிட்டிருந்தது.

இதனிடையே அமொிக்கா உட்பட இலங்கைக்கு கூடுதல் உதவி வழங்கும் நாடுகள் அனைத்தும் அமைதிப் பேச்சுக்கள் மண்டும் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே நிதியுதவி வழங்க முடியும் என்ற நிபந்தனையையும் விதித்திருந்தன.

இநநிலையிலேயே சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டதுடன் உதவி வழங்கும் நாடுகளின் நிதி உதவிகிடைப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல ஆலோசகா அன்ரன் பாலசிங்கம் அண்மையில் கருத்து வெளியிடுகையில்,உதவி வழங்கும் நாடுகள் சமாதானப் பேச்சுக்களுகக்கு ஆதரவு வழங்கலாம். இரு தரப்பினரும் பேச்சுக்கள் மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் ாதியான தீர்வுகாண வேணடுமென ஊக்குவிக்கலாம் ஆனால் அரசியல் தீாவு இவ்வாறுதான் அமைய வேண்டுமென எவ்வகையிலும் தலையீடுகளை மேற்கொள்ளவோ அன்றேல் அவற்றைத் திணிக்கவோ கூடாது என்று தெரிவித்திருந்தார்.

மேலும் டோக்கியோ மாநாடு குறித்து கருத்து வெளியிட்டிருந்த அன்ரன் பாலசிங்கம்,டோக்கியோவில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை விடுதலைப் புலிகள் பகிஷ்கரித்திருந்தனா.

எனவே இந்த மாநாட்டில் எட்டப்பட்ட தாமானங்கள் அல்லது பிரகடனங்கள் எந்த வகையிலும் புலிகளைக் கட்டுப் படுத்த முடியாது என்றும் அவர் கூறியிருந்தார்.

மேலும் இலங்கை அரசு தனது நட்பு நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து டோக்கியோ மாநாட்டில் பல்வேறு தீர்மானங்களை எடுத்தது. எவ்வாறெனினும் சமாதான முயற்சியில் அந்நிய சக்திகள் அனாவசியமாகத் தலையிடுவதாக குற்றம் சுமத்தி நாம் ஏலவே டோக்கியோ பிரகடனத்தை நிராகாித்திருந்தோம் என்றும் அன்ரன்பாலசிங்கம் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-121)

## இராசிபலன்

**07.11.2004**

**(ஐப்பசி 22, ஞாயிற்றுக்கிழமை)**

**தசமி ந.இ. 12.08 மணிவரை**

**மகம் முற்பகல் 08.32 மணிவரை**

**இராகுகாலம் 4.35-06.05 மணிவரை**

**சுபநேரம் 09.05- 10.35 மணிவரை**

**கௌரி விரதம் 16ஆம் நாள்**

- **மேடம்** தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணக்குறைவு, பிரயாணக் கஷ்டம்.
- **இடபம்** புதியவிடயம், ரோகபயம், அற்பா உறவு, முயற்சி தாமதம்.
- **மிதுனம்** கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, தனலாபம்.
- **கடகம்** மாதர் நட்பு, மதிப்பு குறைவு, பொருள் விரயம், முயற்சி தாமதம்.
- **சிங்கம்** நல்லமுயற்சி, ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், சயனசுகம்.
- **கன்னி** பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படுதல், பணவிரயம், காரிய சிந்தை.
- **துலாம்** தெய்வ தரிசனம், தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, புகழ்.
- **விருச்சிகம்** சுபநிகழ்ச்சி, கடின முயற்சி, காரியசிந்தை, உறவினர் உதவி.
- **தனுசு** ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம், கட்டுப்பாடு.
- **மகரம்** எதிர்பாராத அச்சம், போசன நன்மை, உடல் வியாதி, காரியத் தடங்கல்.
- **கும்பம்** திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, கௌரவமான நிலை, போசனசுகம்.
- **மீனம்** திடீர் பயணம், பண வருவாய், நல்ல முயற்சி, ஆரோக்கியம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## 4 வருடங்களுக்கு முன் காணாமல்போன இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நான்கு வருடங்களுக்கு முன்பு இராணுவத்திலிருந்து காணாமல் போனதாகக் கருதப்பட்ட இராணுவச் சிப்பாயொருவா கொள்ளைச் சம்பவம் தொடாபாக வியாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுதத் புத்திக ஜயவிக்கிரம என்ற இந்த இராணுவச் சிப்பாய் வவுனியாவில் பணியாற்றியபோது கடமையில் இருந்த வேளை காணாமல் போயிருந்தார்.

இது தொடர்பாக இந்நபரது பெற்றோர் கொழும்பு மேல் நீதிமனறத்தில் இவரைக் கண்டுபிடித்துத் தருமாறு கோாி ஆட்கொணர்வு மனுவொன்றையும் தாக்கல் செய்திருந்தனர்.

காலால் படைத் தளபதி மேஜா ஜெனரல் நந்தா மல்லவாராச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோரை இந்த மனுவில் எதிாிகளாகக் குறிப்பிட்டு இவர்கள் தான் இதற்குப் பொறுப்பு என்றும் சுட்டிக் காட்டியிருந்தனர். (க)

## சேது சமுத்திரத்திட்டத்தால் இலங்கை நன்மை அடையும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டம் இந்தியாவுக்கு மாத்திரமில்லாமல் இலங்கைக்கும் நன்மையைப் பெற்றுக் கொடுக்குமென இநதிய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று முன்தினம் புதுடில்லியில் தாஜ் விருந்தகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இச் சந்திப்பின் போது 1998 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக மளாய்வை மேற்கொண்டதுடன் இந்தியா இலங்கைக்கு வழங்கும் கடன் திட்டத்தை அதிகரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது. இதன்படி 100 மில்லியன் டொலர்களைக் கடனாக வழங்க இணக்கம் காணப்பட்டது. இக்கடன் திட்டம் கிராமிய சமூக வீதி அபிவிருத்திக்கு திட்டங்கள் பயன்படுத்தப்படும் அதே வேளை இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் தீர்த்துக் கொள்ள இணக்கம் காணப்பட்டதுடன் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூட்டு செயற் குழு உருவாக்கப்பட்டு புரிந்துணர்வு உடனபடிக்கை கைச்சாத்திடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சந்திப்பில் ஜனாதிபதியுடன லஷ்மன் கதிர்காமா,சுசில் பிறேம் ஜெயந் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-8)

## இலவச மருத்துவமுகாம்

(திருநெல்வேலி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஆழியவளை திலீபன் மருத்துவமனையில் இன்று ஞாயிற்றுக் கிழமை இலவச மருத்துவ முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதில் கண்பரிசோதணை, கண்ணாடி வழங்கல், பல்வியாதிகளைப் பரிசோதித்தல், பொதுவைத்தியம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவசேவைகளும் வழங்கப்படும். வைத்தியத்துறை சார்ந்த வல்நனர்கள் இச்சேவையை வழங்குவார்கள். (ப-43)

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று - குறள்

வலம்புரி

# ஜனாதிபதியின் குத்துக்கரணம்

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் முன்வருவார்கள் என தான் நம்பிக்கை கொண்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை அவர் இந்தியாவில் வைத்து வெளியிட்டுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டதற்கான காரணங்களை மழுங்கடிப்புச் செய்த ஜனாதிபதி, சமாதானப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளே ஒத்திவைத்து வருவதுபோன்ற பொருளில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்று ஏழாவது ற்றுப் பேச்சை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றவேளையில் அதனைத் தடுத்து ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்தது யார்? என்ற வினவலுக்கு முன்னால் தன்னிடம் இருக்கக் கூடிய "தப்பித்துக்கொள்ளும் தந்திரோபாயத்தை" ஜனாதிபதி பயன்படுத்திக்கொள்வது அபத்தமான செயலாகும்.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுப்போயிருப்பதற்கான காரணங்களை - இருதரப்புவாதங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தும் பொறுப்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயையே சாரும்.

எனினும் எதிர்கால நன்மை கருதியும், தான் ஓர் அனுசரணையாளர் என்ற வரையறை கருதியும் பேச்சுகள் தடைப்பட்டமைக்கான காரணங்களை வெளிப்படுத்துவதில் நோர்வே மௌனம் கொள்கிறது.

அத்தகைய மௌனம் தேவையானதாயினும், பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஜனாதிபதியோ அன்றி விடுதலைப் புலிகளோ முரண்பாடான தகவல்களை வெளியிட்டால், அது விடயத்தில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் கட்டாயம் நோர்வேக்கு உண்டு. இருந்தும் அது விடயத்திலும் நோர்வே கண்டுகொள்ளாத்தனத்தை கடைப்பிடிப்பது அவ்வளவு நல்லதல்ல.

அவ்வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவில் வைத்துத் தெரிவித்த கருத்துக் குறித்து நோர்வே அக்கறைகொள்வது அந்நாட்டின் முயற்சி வெற்றிபெறுவதற்கான வழியாகவிருக்கும். அதாவது சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகள் வருவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு அதிகரித்துள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அப்படியாயின் அதன் மறுபக்கம், சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் அக்கறையற்று இருப்பதாகவும் - ஜனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவுமே லகநாடுகள் பொருள்கொள்ளும். உண்மை ஒன்றாக இருக்க பொய்மை உண்மையின் இடத்தை நிரப்புமாயின் நிலைமை மோசமாகவே மாற்றமடையும்.

சமாதான விரோதிகளான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு பெரும்பான்மை பலத்தை இழந்தும், இழவாமலும் காலத்தை ஓட்டும் ஓர் அரசுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது எப்படி என்ற நியாயமான கேள்விகளுக்கு அப்பால், ஐக்கிய தேசிய முன்னணியுடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் பேச்சை முன்னெடுக்க மறுக்கும் அரசுடன் எவ்வாறு பேசமுடியும் என்ற நியாயப்பாடுகளுக்கு அப்பால், ஜனாதிபதி இந்தியாவில் தெரிவித்த கருத்து அவரின் மிகப்பெரிய குத்துக்கரணமாகும்.

# நான் சிறையில் அடைக்கப்பட்டால் ஜனாதிபதி புத்தகத்துடனேயே மீள்வேன்

## எஸ்.பி. திஸாநாயக்கா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்னைக் கைது செய்து சிறையில அடைக்க முய ற்சிக்கிறார். இதனால் நான் எந்நேரமும் கைது செய்யப்படலாம், ஆனாலும் எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுக்க நான் தயாராகவுள்ளேன்"என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் எம்.பியுமான எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

எனனைக் கைது செய்து சிறையில் அடைத்து, எனது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்த முயற்சிக்கும் ஜனாதிபதியைப் பற்றி புத்தகம் ஒன்றை நான் எழுதவேண்டும்.

ஜனாதிபதி என்னைச் சிறையில அடைத்தால் ஜனாதிபதி தொடர்பான புத்தகத்துடனேயே நான் வெளியே வருவேன் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் செய்தியாளர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த எஸ்பி திஸாநாயக்கா மேலும் கூறியதாவது;

ஜனாதிபதி தனது அரசியல் எதிரிகளை கைது செய்வதற்கும் வழக்குத்தாக்கல் செய்வதற்கும் முயற்சித்து வருகின்றார்.

இதன் மூலம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபட முயல்கின்றார். ஜனாதிபதியின் பிரதான அச்சுறுத்தல் எனக்கு மட்டுமே உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராகவிருந்த நான் அதிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டேன். அன்று முதல் என் மீது பல குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி சுமத்திவருகின்றார்.

ஜனாதிபதி பல ஆயிரக் கணக்கான ரூபாய் செலவிட்டு ஹெலிகப்டரில் பறந்து எனது வீட்டை 29 தடவைகள் சுற்றி வீடியோப்படம் எடுத்து ஊட கங்களில் வெளியிட்டார்.



ஆனால் ஜனாதிபதியின் அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் நிரபராதி என நான் வெளியேறினேன்.

தற்போது மீண்டும் என்னைப் பழிவாங்க ஆரம்பித்துள்ளார்.

அத்துடன், அமைச்சர் மங்கள சமரவீரவும் அடுத்த வாரத்தினுள் என்னைச் சிறையில் அடைப்பதாக கூறியுள்ளார்.

சமுர்த்தி அமைச்சினால் பல்வேறு தேவைகளுக்கென வழங்கப்பட்ட நிதி உரிய முறையில் குறித்த சில இடங்களைச் சென்றடையவில்லை என்பதற்காக அதற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரைக் கைது செய்ய முடியாது.

அப்படியானால் அமைச்சர்களில் 90 வதமானவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

ஜனாதிபதி இத்தகைய பழிவாங்கும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் இவ்வாறு அவர் கூறினார். (க-10)

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறிக்குள்ளாக்கும்!

## த.தே. கூட்டமைப்பினர் கவலை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசாங்கம் இந்திய அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளமை இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு பெரும் பின்னடைவாகவே அமையும். அத்துடன், இது இலங்கை வாழ் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் விடயமாகுமென்று தமிழ்த் தேசிக கூட்டடைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து இந்தியா இந்த சமாதான காலத்திலாவது மீள் பரிசிலனை செய்யவேண்டும். சமாதான முயற்சிகள் நடைபெற்று வரும் இந்த வேளையில் இத்தகைய ஒப்பந்தங்கள் சமாதானப் பயணத்தை முற்றுமுழுதாகப் பாதிக்கும்.

அத்துடன், சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுதது்ச் செல்ல உதவாது. மாறாக பின் தள்ளுவதாகவே அமையும் என அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிட்ட மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன்; கைச்சாத்திப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கை அரசின் அரசியல் இராணுவப் பலத்தை அதிகரிப்பதாகவே அமைவதுடன், இந்த ஒப்பந்தம் சமாதானம் நிலைநாட்டப்படுவதற்கு வழிகாட்டாது. அத்துடன் சமாதானப் பயணத்தை பாதிக்கும் ஒரு செயலாகவே இதைக் கருத வேண்டியுள்ளது.

சமாதான முயற்சியில் அரசாங்கம், புலிகள் என இரு தரப்பினர் உள்ளனர். ஆனால் விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள இந்தியா ஒரு பக்கத்துடன் பேசி ஒப்பந்தம் செய்து கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அயல்நாடான இந்தியா இனப் பிரச்சினை தீர்வில் காத்திரமான பங்களிப்புகளைச் செய்யவேண்டும்.

ஆனால் இந்தியாவோ ஒரு தரப்பான இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்வது ஒட்டுமொத்தமாகத் தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இறுதி நேரத்திலாவது ஒப்பந்தம் தொடர்பாக மீள் பரிசீலனை செய்வதுடன், ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை நிறுத்தி வைக்கவேண்டுமென அவர் மேலும் கூறினார். (க-8)

# 2007 ஆண்டுக்கு முன்னர் தேர்தல் என்ற சொல்லுக்கே இடமில்லையாம்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

(கொழும்பு)

2007 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னதாக மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலை எள்ளளவேனும் எதிர்பார்க்க முடியாதென்று வர்த்தக வாணிப நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டில் மக்களிடமிருந்து ஜனாதிபதி பெற்றுக் கொண்ட ஆணை 2000 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. அதன் பின்னர் 1999ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு மக்களிடமிருந்து புதிய ஆணை கிடைக்கப் பெற்றது.

எனவே, அதிலிருந்து மேலும் 6 வருடங்களுக்கு ஜனாதிபதியாகப் பணியாற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஐககிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் அடுத்த வருடம் டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் தற்போதைய ஜனாதிபதியை நாட்டின் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்ததையடுத்து, அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, அரசியல் அமைப்புச சட்டத்தின் 31 ஆவது சரத்தின் படி ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006 ஆம் ஆணடு நவம்பர் மாதம் 11 ஆம் திகதியே முடிவடைகிறது என பாராளுமனற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத் தரணியுமான விஜய தாஸ ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுக்க வருடம் டிசம்பர் மாகக்கிற்குப் பின்னர் கற்போதைய ஜனாதிபதியை ஏற்றுக் கொள்ள விரும்பாத எவரும நாட்டின் அடிப்படைச் சட்டத்தை மீறுபவராகக் கருதப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் அமைப்புச்சட்டத்தை மதித்து அதனைப் பாதுகாபபதென பாராளுமன்ற உறுப்பினர்கள் அளித்த வாக்குறுதியை மீறும் செயலாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

### ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**நீங்கள் இரண்டாயிரம் மருத்துவமனைகள் கட்டியிருக்கலாம், ஐம்பதாயிரம் சாலைகள் அமைததிருக்கலாம், ஆனால் நீங்கள் ஆன்மா என்று உணராவிட்டால் இவற்றால் என்ன பயன்? நாயின் உணர்ச்சிகளுடன் நாயைப் போல் சாகிறீர்கள். தான் ஜடம், அழிந்து விடப்போகிறோம் என்று நினைப்பதால் தான் நாய் அழுகிறது, ஊளையிடுகிறது.**

சுவாமி விவேகானந்தர்

## மாவீரர் பெற்றோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் கல்லறைகள், நினைவுக் கற்கள் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பிரதேச, கோட்ட அரசியல்துறைச் செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

மாவீரர்தின இறுதி நாளான எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர்களின் நினைவுச் சுடரேற்றுவதற்காக பெற்றோர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச)

# கூட்டமைப்பு - தமிழ்ச்செல்வன் நாளை மறுதினம் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போதைய அரசியல் நிலைப்பாடு, தேங்கிக்கிடக்கும் சமாதான முன்னெடுப்பின் அடுத்தகட்ட நகர்வு குறித்து இச் சந்திப்பின்போது முக்கியமாக கலந்துரையாடப்படும் என கூறப்படுகின்றது.

மூன்று வாரகால விஜயத்தை மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மீளத் திரும்பிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முதல் தடவையாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (க-121)

## 'துயர்வெல்லும் துணை' இசைத்தட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் எழுத்துருவாக்கத்தில் தமிழக இசையமைப்பாளர் இலக்கியனின் இசையில் தமிழகப் பின்னணிப் பாடகர்களின் குரலில் உருவான திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மனின் 'துயர் வெல்லும் துணை' பாடல் இசைத்தட்டு வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசைத்தட்டினை யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெளியிட்டுவைக்க அதனை இ.முத்துலிங்கம் பெறவுள்ளார். (ச)

# சமாதான நடவடிக்கைகள் குறித்து பல்லின சமூகங்களுக்கும் விளக்கப்படும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக பல்லின சமூகங்களின் பிரதிநிதிகளிற்கும் தெளிவுபடுத்தும் செயற்திட்டத்தை அரசியல் யாப்பு விவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் பிரதேச சபை, மாகாண சபை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தின் சமாதான வேலைத்திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தவுள்ளதாக அரசியல் யாப்பு அமைச்சர் டி.குணசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெண் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே இவ் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இணக்கசபை உறுப்பினர்களுக்கு இதுபற்றித் தெளிவுபடுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினை தோன்றுவதற்கான காரணங்கள், அதற்குத் தீர்வுகாணும் வகையில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் விடயத்தில் தோன்றியுள்ள முரண்பாடுகள் போன்றவை தெளிவுபடுத்தப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுக்கு இவை தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் அவர்கள் மூலம் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-10)

## ஒருவருட இடைவெளியில் சம்பவம்

# மனைவியை மோதிய பஸ்சே கணவனை பலிகொண்டது!

தீவக கல்வி அதிகாரி பலியான மினி பஸ் விபத்துச் சம்பவத்தில் மினி பஸ் உரிமையாளரான கந்தசாமி மதிவதனி என்பவரை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையிலும் செல்வதற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் அனுமதியளித்தார்.

பிணையாளிகளில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருக்கவேண்டுமெனவும், குறித்த நபர் வழக்குமுடியும் வரை யாழ். குடாநாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்றும் கடுமையான நிபந்தனையுடனேயே அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவ் விபத்துக்குக் காரணமான சாரதி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ்விபத்தில் தீவக கல்வி அதிகாரியை மோதிக்கொன்ற அதேபஸ் அவரது மனைவியை கடந்த ஆண்டு வல்லைப்பாலத்தை அண்டிய பகுதியில் மோதிக் காயப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (ப-101)

## ஈராக்கில் கடத்தப்பட்ட

# தினேசை விடுவிப்பதற்கு பணிப்பாளர் நடவடிக்கை

(கொழும்பு)

ஈராக் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த சாரதியான தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணத்தை விடுவிப்பது தொடர்பாக தாம் கவனம் செலுத்திவருவதாக சர்வதேச குடியகல்வாளர் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் புறூடன் மைக்கென்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஈராக் நாட்டில் எமது சங்கத்தின் அலுவலகம் இல்லாத காரணத்தால் தகவல்களைப் பெறுவதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

ஈராக் அரசிடமும், பாதுகாப்பு படையினரிடமும் ராஜரட்ணத்தின் நிலைமை குறித்து அறியத்தருமாறு கேட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன குறித்த சங்கத்திடம் பிரஸ்தாப குடும்பஸ்தரின் விடுதலை குறித்து கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு அனுப்பிய பதில் கடிதத்துக்கே குறித்த சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் இந்தத் தகவலை தெரிவித்திருக்கின்றார். (இ-8)

# இலங்கை - இந்திய...

இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் சரத்துக்கள் சேர்க்கப்பட்டு இறுதி வடிவம்பெறாத நிலையில் அது கைச்சாத்திடப்படுவதில் காலதாமதம் காணப்படுகிறது.

இந்நிலையில் ஒப்பந்தத்தை மிக விரைவாக கைச்சாத்திட்டு நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்திவருகிறார்.

உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பாக அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.என்.டிக்ஸிற் ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இப் பேச்சுக்களின் அடிப்படையில் உடனபடிக்கையை கைச்சாத்திட்டு நடைமுறைப் படுத்துவது தொடர்பாக பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான பூர்வாங்க நடைமுறைகள் பூர்த்தியடைந்து இருநாடுகளும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில் ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படுமென்று தான் நம்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஈழத்தமிழ் மக்களின் நலனுக்கு பாதிப்பாக அமையுமென்று எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளமை இங்கு சுட்டிகாட்டத்தக்கது. (இ-8)

## அப்துல் கலாம்...

கடற்பரப்பில் ஏற்படும் பிரச்சினை குறித்து ஜனாதிபதி அப்துல் கலாம் வினவியபோது. இப் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்பட்டு தீர்க்கப்படும் என அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய ஜனாதிபதிக்கு உறுதியளித்தார்.

இந்திய மீனவர்கள் தொழில் செய்யும் கடற்பிரதேசங்களிலேயே விடுதலைப் புலிகளும் தமது நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக இலங்கைப் பாதுகாப்புப் படையினர் அவர்களின் போக்குவரத்தினை கண்காணிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு சுட்டிக்காட்டினார்.

எப்படியிருந்தபோதிலும் இலங்கைப் படையினரால் கைதுசெய்யப்படும் இந்திய மீனவரை விடுதலை செய்வது குறித்து இலங்கையின் நீதித் துறையினர் முன்னுரிமை வழங்குவரென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்திய ஜனாதிபதிக்கு உறுதி வழங்கினார். (இ-121)

## இ.போ.சபை...

இச்சம்பவத்தின்போது சாரதியும் நடத்துநரும் காயங்கள் எதுவுமின்றி யன்னல் வழியாகத் தப்பிக் கொண்டனர்.

பின்னர் பாரந்தூக்கி மூலம் பஸ் நிமிர்த்தப்பட்டது இதன் காரணமாக அப்பாதையூடான போக்குவரத்து சிறிதுநேரம் தடைப்பட்டது. (ச-101)

# தேசிய நாடக சபை உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலைக் கழகத்தின் கீழ் செயற்பட்டுவரும் தேசிய நாடகசபை உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

கடந்தகால யுத்தம் காரணமாக தென்னிலங்கையோடு தொடர்புகள் அற்றிருந்த தமிழ்ப்பகுதிகளில் உள்ள கலைஞர்களின் தொடர்புகளை மீளக்கட்டியெழுப்பும் நோக்குடனேயே இவர்கள் இன்று யாழ். வருகின்றனர்.

இவர்கள் தமிழ் பகுதிகளின் உள்ள கலைஞர்களோடு கலந்துரையாடல்கள் நடாத்தி அவர்களின் ஆக்கங்களை கொழும்புக்கு எடுத்துச் செல்லவுள்ளனர்.

கொழும்பில் நடைபெறும் தேசிய நாடக விழாக்களில் தமிழ்ப் பகுதி கலைஞர்களின் ஆக்கங்களை இடம்பெறச் செய்யும் நோக்குடனும், அரச மட்டப் போட்டிகளில் தமிழ்க் கலைஞர்கள் பங்கேற்று தமது திறமைகளை வெளிக்கொணர வேண்டுமென்ற நோக்குடனும் தேசிய நாடகசபையின் மூத்த தமிழ் உறுப்பினர்களான கலாபூசணம் கலைச்செல்வன் கலைஞர் வ.ஆ. தங்கவேலாயுதம் ஆகியோர் தலைமையில் கலைஞர்கள் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் இங்குள்ள கலைஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை இன்று மாலை 4 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். எனவே இக் கலந்துரையாடலில் சகல கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-8)

## வன்னிப் பரப்பில்...

அங்கிருந்த பொருட்கள் நீரில் மூழ்கி பழுதாகியுள்ளதாக முகாமையாளர் தெரிவித்தார். அம்பளவன் பொக்கணை, புதிய மாத்தளன், பழைய மாத்தளன் உட்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முறிகண்டிப் பகுதியில் உள்ள குடிசைகளினுள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து திருமுறிகண்டி பாடசாலையில் தங்கியுள்ளனர்.

மன்னார் பகுதியிலும் பல கிராமங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. (ச)

நாதன்ஸ் ஸினிமா
DENNIS HOPPER'S
TYCUS
(ஆங்கிலப் படம்)
தினசரி 4 காட்சிகள்
மு.ப. 10.00, பி.ப. 2.00, 6.00
இரவு 8.00 (சி-675)
யாழ்ப்பாணம்

ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்
புதிய கல்வி ஆண்டில்
தரம் 03 -O/L வரை
அனைத்துப் பாடங்களும் கற்பிப்பதற்கான தகுதியும், அனுபவமும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்கள் யாவும் கல்வித்தகமைகள். கற்பித்தல் அனுபவங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து 15.11.2004க்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும்.
The Express Institute
irupalai, kopay
அதிபர்
(8981)

காவலாளி பதவி வெற்றிடம்
இரவு: (பி.ப. 6.00 - காலை 6.00வரை)
பகல்: (காலை 6.00 - பி.ப 6.00 வரை)
இரு நேரங்களிலும் அல்லது ஒரு நேரத்தில் காவல் கடமையில் ஈடுபடக் கூடியவர்கள் நேரில் வரவும். அல்லது விண்ணப்பிக்கவும்.
The Express Institute
irupalai, kopay
- அதிபர்
(8981)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.